புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

# கல்லாவி வேடியப்பன் வழிபட்டு முறைகளும் நம்பிக்கைகளும்

**முனைவர் ஆ. சந்திரன்,**

(Ref: SHC/DB/Grant/20234/02)

உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,

தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்,

திருப்பத்தூர் மாவட்டம்.

**ஆய்வுச்சுருக்கம்**

தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி முதலான மாவட்டங்களில் பரவலாக வேடியப்பன் தெய்வம் வழிபடப்பட்டு வருகின்றது. நடுகல் வழிபாட்டின் பின்னணியில் வழிபடப்பட்டு வரக்கூடிய தெய்வமாக உள்ளது இது. கி.பி ஐந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதி, ஆறு, ஏழு, எட்டு ஆகிய நூற்றாண்டுகளில் கிடைக்கக்கூடிய நடுக்கற்களில் பெரும்பான்மையானவை வேடியப்பன் தெய்வங்களாக இன்று வழிபட்டு வரக்கூடியவையாக உள்ளன. அதற்குப் பிந்தைய காலகட்டத்தைச் சார்ந்த நடுகற்கள் கற்சிலைகள் மற்றும் உலோகங்களால் செய்யப்பட்ட சிலைகள் பின்னணியிலும் வேடியப்பன் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் வழிபடப்பட்டு வரக்கூடிய வேடியப்பன் வழிபாட்டில் ஒன்றாக விளங்கக்கூடியது கல்லாவி வேடியப்பன் கோயில். உருவத்தோடு கூடிய நடுகற்கள் இங்கு வேடியப்பனாகவும், முனியப்பனாகவும் வழிபடப்பட்டு வருகின்றன. ஒன்று சைவ கடவுளாகவும் மற்றொன்று அசைவ கடவுளாகவும் வழிபடப்பட்டு வருகிறது. கல்லாவியில் உள்ள இந்த வேடியப்பன் என்ற தெய்வ வழிபாடு, மக்களின் நம்பிக்கைகள் பற்றிய செய்திகளை ஆவணப்படுத்த முயல்கிறது இந்த கட்டுரை.

Keywords - கல்லாவி வேடியப்பன் கோவில், தெய்வ வழிபாடு, மக்களின் நம்பிக்கைகள், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை.

**முன்னுரை**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பேருந்து நிலையத்திலிருந்து 14 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது கல்லாவி வேடியப்பன் கோவில். இந்தக் கோயில் ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளுக்கு முந்தையதாக இருக்கலாம் என்று தெரிகிறது. கல்லாவி என்ற ஊரில் அமைந்துள்ள இக்கோயிலில் வேடியப்பன், முனியப்பன் என்ற இரண்டு தெய்வங்கள் வழிபாட்டில் உள்ளன. வேடியப்பனுக்கு முதல் பூசையும் முனியப்பனுக்கு இரண்டாவது பூசையும் (முப்பூசை) தொடர்ச்சியாகப் பல நூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

திங்கள், வெள்ளி, ஞாயிறு ஆகிய வார நாட்களிலும் அமாவாசை முதலான நாட்களிலும் சிறப்பு பூசைகள் நடைபெறுகின்றன. குழந்தை வரம், திருமணம் குறித்த வேண்டுதல்கள், வேலை வாய்ப்பு முதலான பல்வேறு வேண்டுதல்களையும் தேவைகளையும் வேடியப்பன் பூர்த்தி செய்வதாக மக்கள் நம்புகின்றனர். பேய், பிசாசு – பில்லி, சூனியம் முதலான தீவினைகளைப் போக்கி மக்களைக் காக்கின்ற கடவுளாக இந்த வேடியப்பன் விளங்குவதாக மக்களால் நம்பப்படுகிறது. ‘சாட்டை அடி கொடுத்தல்’ என்ற நிகழ்வு இங்கு நடைபெறுகின்றது. வேடியப்பனை மனதில் வேண்டிக்கொண்டு பூசாரியின் கையால் சாட்டை அடிவாங்கினால் தங்களைப் பிடித்துள்ள தீவினைகள் விலகுவதாகவும், மன உறுதி வருவதாகவும் மக்கள் நம்புகின்றனர். அவ்வாறு பூசாரி சாட்டையடிக்கும் பொழுது, ‘பகவானே உத்தண்டவாடா பரமேஸ்வரா திருப்பதி முனியப்பா பேய் பிசாசு நொண்டிமுனி சண்டிமுனி கிரக கோச்சாரம் குடும்ப வில்லங்கம் வக்கரம் பீட மூதேவி .... செமயா வச்சிக் கப்பத்தவேண்டும் கடவுளே...” என்று கூறியவாறே தன்னுடைய கையில் உள்ள சாட்டையால் ஓங்கி அடிக்கின்றார்.

பூசை செய்த பின்னர் தீர்த்தம் அளிக்கப்படுகின்றது. ‘பகவானே உத்தண்டவாடா அறிஹரி புத்திரா ஐயனாரப்பா ஆதிசிவகுமரா.... செமயா வச்சிக் கப்பத்தவேண்டும்

கடவுளே...' என்று பக்தர்களின் நலனைக்காக்க வேண்டியவாறே பூசாரி பக்தர்களின் மேல் தீர்த்தத்தினைத் தெளிக்கிறார்.

**வேடியப்பன் வரலாறு**

வேடியப்பன் பற்றிய வரலாறு பின்வருமாறு கூறப்படுகின்றது. ''இந்த வேடியப்பன் கல்லாவி 'வில்வேடன்' என்று அழைக்கப்படுகின்றார். இவர் இருமாத்தூர் என்ற ஊரில் இருந்து வந்தவர். கல்லாவியில் வந்து தங்கி இருக்கிற பொழுது இவருக்கு துணையாக திருப்பதியில் இருந்து ஆயிரம் முனிக்கு அடங்காத ஒரு முனியாக முனீஸ்வரன் என்பவரைத் தனக்கு உதவியாளராக உடன் அழைத்துக் கொண்டார். அதனால் இந்த வேடியப்பனுக்கு முதல் பூசையும் முனியப்பனுக்கு இரண்டாவது பூசையும் (முப்பூசை) தொடர்ச்சியாகப் பல நூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது'' என்று கூறும் கோயில் பூசாரி, திருப்பதி வேங்கடவனுடன் இந்த வேடியப்பன் கதை தொடர்பு படுத்தப்புடையது என்கிறார். அத்துடன், 'முத்துவேடி' என்ற பெயரில் வேடியப்பனுக்கு ஒரு தங்கை இருந்ததாகவும் இன்னொரு கதையையும் சொல்கிறார்.

இந்தக் கதையில் முத்துவேடியும் வேடியப்பனும் ஒன்றாக நடந்து செல்லுகிற பொழுது அந்த ஊரில் உள்ள ஒரு மாட்டுக்காரன் இருவரையும் கணவன் மனைவிக்காகத் தவறாகப் புரிந்து கொண்டான். அதனால் அன்றிலிருந்து இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வெளியில் வருவதை நிறுத்திக் கொண்டார்கள். அதனால் இன்றும் வேடியப்பன் வீதி உலாவின் போது முத்துவேடி வெளியில் வருவதில்லை. அவர் ஆலயத்தில் ஒரு பகுதியில் இருக்கிறார்.

இன்னொரு கதை இந்த வேடியப்பனுடன் இணைத்துச் சொல்லப்படுகிறது. வழக்கமாகச் சொல்லப்படும் வேடியப்பன் கதைகளில் வரும் சூரபத்மன் என்ற சூரன் அழிவுடன் அது தொடர்புபடுகிறது. அதாவது, மோகினி வடித்தில் மயங்கித் தான் வாங்கிய வரத்தைப் பற்றி மறந்ததால் மாண்டு போனதை அறிந்து, பதுங்கி இருந்த (கொடுத்த வரத்தினால் தன் உயிருக்குப் பயந்து) உத்திராச்சத்தில் இருந்து வெளியில் வந்த சிவன்பெருமான் கிருஷ்ணனின் அழகான அந்த (மோகினி) மாயத் தோற்றத்தைக் கண்ட காம இச்சையால் வெளியான விந்துவினால் உருவானவன் இந்த வேடியப்பன்.

அதாவது, ஹரிஹரன் புத்திரனான ஐயப்பனைப் போன்றவன் என்று ஐயப்பன், வேடியப்பன், முனியப்பன் என்ற மூவரும் தொடர்புபடுத்தப்படுகிற கதை இங்கும் சொல்லப்படுகிறது.

**அருள்வாக்குக் கேட்டல்**

அருள்வாக்கு கேட்டல் என்பது இந்தக் கோயிலில் இருந்து வரும் நம்பிக்கைகளில் ஒன்று. அதற்குப் பூவாக்குக் கேட்டல் என்று பெயர். பக்தர்கள் வேண்டுதலைக் கேட்டு வேடியப்பன் அருள் கொடுப்பார் என்று நம்பப்படுகின்றது. பூவாக்குக் கேட்கிறபொழுது அவர்கள் கோயில் பூசாரி பாடலைப் பாடி வேடியப்பனிடம் வேண்டுதலை முறையிடுகிறார். அவ்வாறு முறையிடுகிற பொழுது நல்லது நடக்கும் எனில் வேடியப்பன் அருள் கொடுப்பார். இல்லை என்றால் அருள் கொடுக்க மாட்டார். அவ்வாறு வேடியப்பன் அருள் கொடுத்தால் அது நடக்கும் இல்லை என்றால் நிச்சயம் அது நடக்காது என்ற நம்பிக்கை இந்த கோயிலிலும் உண்டு.

'கல்லாவி வில்வேடா! காக்கும் கரை உள்ளாரப்ப. திருப்பதி முனியப்பா. கருங்கல் உருவுடன் நீ இருப்பது உண்மையானால் எங்களுக்கு அருள் கொடுப்பா!' இப்படி அந்தப் பாடல் தொடங்குகின்றது.

வேடியப்பன் கதைகள் மற்றும் நம்பிக்கைகள்

கல்லாவி வேடியப்பனுடைய வரலாற்றைச் சொல்லும் இந்தக் கோயில் பூசாரிகளால் தொடர்ச்சியாக வழி வழியாக சொல்லப்பட்டு வருவதான ஒரு கதையும் இங்குச் சொல்லப்படுகிறது. 'வேடியப்பன் தொடக்க காலத்தில் அந்தக் காட்டு வழியாகச் சென்ற குழந்தை இல்லாத ஏழு நபர்களுக்கு குழந்தை வரம் கொடுத்தார்'

இப்படியாக வேடியப்பனுடைய ஏராளமான கதைகள் இந்தக் கல்லாவி வேடியப்பன் வழியாகச் சொல்லப்பட்டாலும் இந்த வேடியப்பன் இருமாத்தூரிலிருந்து வந்தார் என்ற ஒரு செய்தியை இவர்கள் தொடர்ச்சியாக கடத்தி வருகிற ஒரு விஷயத்தில் முக்கியமான ஒன்றாக உள்ளது. இந்த இடத்தில் இன்னொரு செய்தியையும் நாம் கவனிக்கவேண்டி உள்ளது. 'சிங்காரப்பேட்டை அருகில் உள்ள சின்னதள்ளப்பாடி என்ற ஊரிலுள்ள வேடியப்பன் கோவிலில் இருந்து தான் கல்லாவிக்கு வந்தது' என்று அங்கு

இருக்கக்கூடிய பூசாரி சொன்ன செய்தி. பொம்மிடியில் உள்ள வேடியப்பன் பெரியவேடி என்றும் கல்லாவியில் உள்ள வேடியப்பன் சின்ன வேடி என்றும் பொம்மிடியில் உள்ளவர்கள் நம்பும் செய்தி. இந்த இரண்டில் எது உண்மை அல்லது இவற்றின் பின்னுள்ள உண்மை என்ன என்று விரிவாக ஆராயப்பட வேண்டி உள்ளது.

**வேடியப்பனும் முனியப்பனும்**

இதுவரை பார்த்தது அங்குள்ளவர்கள் தொடர்ச்சியாக அறிந்த அல்லது நம்புகிற நம்பிக்கைகளாக இருக்கின்றவை.

இவற்றைத் தாண்டி நாம் கள ஆய்வில் பார்க்கிற பொழுது வேடியப்பன் உடைய உருவம் பொறித்த நடுகற்கள் கோவிலில் நான்கு உள்ளன. அந்த நடுக்கற்களை ஆராய்ந்து பார்க்க அவை பின்வரும் சிந்தனைகளை எழுப்புகின்றன.

ஒன்று முதல் பூசைக்கு உரிய வேடியப்பன் இருக்கும் கருவறையில் உள்ள நடுகல்லில் புலிகுத்தி வீரனின் தோற்றம் உள்ளது. அந்த இடத்திற்கு சற்று தள்ளி இரண்டு நடுகற்கள் அருகருகே உள்ளன. இரண்டுக்கு இரண்டு அடி என்ற அளவிற்கு உள்ள அந்த நடுக்கல்லில் ஒன்று புலிகுத்தி வீரன் உருவமுடையதாக உள்ளது. மற்றொன்று குதிரையில் வீரன் ஒருவன் அமர்ந்துள்ளவாறு உள்ளது. நாகங்கள் வடிக்கபட்ட நடுகற்களின் அருகில் அவை வைக்கப்படுள்ளன.

அதற்கு அடுத்ததாக முனியப்பன் என்று வழிபாட்டு வரப்படும் இடத்தில் இருக்கும் நடுகல். அது ஒரு பன்றிகுத்திக் கல்லாக உள்ளது. இந்தப் பன்றிகுத்திக் கல்லும் கோயிலினுள்ளே உள்ள புலிகுத்திக் கல்லும் உருவத்திலும் அளவிலும் ஒரே அளவில் உள்ளன என்பதும் கவனிக்கத்தக்க ஒன்று.

இவ்வாறு புலி குத்திவடிவில் இரண்டும், பன்றி குத்தி வடிவில் ஒன்றும், குதிரையின் மேல் செல்லுகிற வடிவில் ஒன்றும் என்று நான்கு வீரர்களின் நடுகற்கள் இருக்கும் நிலையில் புலிகுத்தி வடிவில் உள்ள இரண்டில் அளவில் பெரிதாக உள்ள ஒரு வீரனின் நடுகல் மட்டுமே வேடியப்பன் என்று வழிபடப்படுவதும் அதே அளவில் உள்ள பன்றிக் குத்திக்கல் முனியப்பன் என்று அடயாளப்படுத்தப்படுள்ளதும் இரண்டு வீரர்களின் நடுகற்கள் அடையாளப் படுத்தப்படாமல் விடப்படுள்ளதும் கவனிக்கதக்கன.

வேடியப்பன் என்பதாக இந்த நான்கு வடிவங்களும் ஏறக்குறைய ஒரே காலகட்டத்தைச் சார்ந்தவையாக இருக்கிறது. அவற்றின் வடிவ அமைப்பு அதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. அப்படி இருக்க பன்றி குத்தி வீரனுடைய நடுக்கல் முனியப்பனாகவும், புலிக்குத்தி மற்றும் குதிரையில் செல்லுகிற வடிவில் உள்ள உருவம் எந்தவிதமான இந்த கதைகளோடு தொடர்பு இல்லாமல் இருப்பதும் வில்லேந்திய (புலிகுத்தி வீரன்) வேடன் மட்டும் இங்கே வேடியப்பனாக வழங்கப்படுவதும் சற்று முரண்பாடாகத் தோன்றுகிறது.

கல்லாவி வேடியப்பனுக்குக் காலத்தால் முற்பட்டதான சின்னாரப்பட்டியில் உள்ள புலிக்குத்திக் கல்லும் பெரிய தள்ளப்பாடியில் உள்ள பன்றி குத்திக் கல்லும் வேடியப்பன் என்றுதான் வழிபடப்பட்டு வருகின்றது. குறிப்பாக பெரிய தள்ளப்பாடியில் உள்ள பன்றி குத்திக்கல் வேடியப்பன் என்று வழிபடப்படுவதுடன் அங்குள்ள மற்றொரு நடுகல் முனியப்பன் என்றும் வழிபடப்பட்டுவருவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இது இவ்வாறிருக்க, பன்றி குத்திக்கல் முனியப்பனாக மாற்றமடைந்திருப்பதும் புலிக்குத்திக்கல் வேடியப்பனுடன் தொடர்பு இல்லாமல் தனியாக இருப்பதும் வேட்டை நிலையில் இருக்கக்கூடிய வில்லேந்தி வேடியப்பன் என்ற உருவம் மட்டும் இந்த வேடியப்பன் கருதப்படுவது என்பதான இந்த முரண்பாட்டை நாம் இணைத்துப் பார்க்க வேண்டி இருக்கிறது அப்படி பார்க்க இந்தப் பன்றி குத்திக்கல், புலிக்குத்திக்கல் என்பதாகத் தொடக்க காலத்தில் வேடியப்பன் இருந்த நிலையில் இருந்து இது அதற்கு அடுத்த கட்ட படிநிலை வளர்ச்சியாக அல்லது இது எந்த விதத்தில் ஏற்பட்ட மாற்றம் என்பது குறித்து நாம் விரிவாக ஆராயப்படவேண்டி உள்ளது.

**முடிவுரை**

கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், விழுப்புரம் முதலான மாவட்டங்களில் பரவலாக வேடியப்பன் கோயில்கள் அமைந்துள்ளன. அவற்றில் மக்களால் நன்கு அறியப்பட்டதாகவும், எண்ணிக்கையில் அதிகமான மக்களால் வழிபடப்படும் கோயிலாகவும் உள்ளது கல்லாவி வேடியப்பன் கோயில். இந்தக் கோயிலுக்குக் காலத்தால் முற்பட்டதான கோயில்கள் பல இருக்கின்றன. அவற்றில் இருமாத்தூர், பொம்மிடி, சின்னதள்ளபாடி ஆகிய ஊர்களில் உள்ள வேடியப்பன்

கோயில்களுடன் இந்தக் கோயில் தொடர்புபடுத்தப் படுகின்றது. இருமாத்தூரில் இருந்து இடப்பெயர்வு செய்த மக்களால் கொண்டுவரப்பட்டது என்று சொல்லப்படுவதும், சின்ன தள்ளப்பாடியில் இருந்து இடப்பெயர்வு செய்யப்பட்டு வந்தவர்களால் கொண்டு வந்த வேடியப்பன் என்றும் ஒருபக்கம் சொல்லப்படுகின்றது. மறுபக்கம் பொம்மிடியில் உள்ள வேடியப்பனின் (பெரியவேடி) சகோதரன்தான் கல்லாவி வேடியிப்பன் அங்குள்ளவர்களால் சொல்லப்படுகிறது. ‘சின்னவேடி’ என்று அம்மக்களால் அழைக்கப்படுவதும் கவனிக்கத்தக்கன. இவ்வாறு இந்த வேடியப்பன் பல்வேறு ஊர்களில் உள்ள வேடியப்பன் கோயிலோடு தொடர்பு படுத்தப்படுகிறது.

கல்லாவி வேடியப்பன் கோயிலில் உள்ள வேடியப்பன் - முனியப்பன் திருப்பதியில் உள்ள சீனிவாசனோடு தொடர்பு படுத்தப்படுகின்றது. அதற்கான ஒரு கதை கல்லாவி வேடியப்பன் கோயிலில் சொல்லப்படுகின்றது. அதன்படிதான் வேடியப்பனுக்கு முழு முதல் சைவ பூசையும் முனியப்பனுக்கு மட்டும் முப்பூசை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.